சுலோஸ் சூலே (Schloss Schule) "S56" இல்  ஒரே கூரையின் கீழ் ஒன்றிணைந்து

**பாடத்திட்டம் ஆரம்ப குழந்தைப்பருவம்: தொ.பே: 079 745 37 95**

**மனுவேலா ஹோப்பவ்வர் (Manuela Hofbauer), சந்திக்கும் நாட்கள் செவ்வாய் முதல் வெள்ளி வரை**

**முற்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட நேரங்களில்.**

சிறு குழந்தைகளுக்கான குழந்தை வளர்ப்பு, கல்வி மற்றும் பராமரிப்பு சம்பந்தமான தகவல்கள். முற்கூட்டிய ஊக்குவிப்பு எல்லோருக்குமான நியாயமான கல்விக்கான சாத்தியங்கள்.நேர நிர்ணயம் முட்டக்கூட்டியே செய்யப்படவேண்டும். தேவையெனில் வீட்டில் வந்து சந்திப்பது சாத்தியம். ஆலோசனை மொழிகள் டொச், ஆங்கிலம் மற்றும் பிரென்ச். வேறு மொழிகளில் மொழிபெயர்ப்புச் சேவையுடன் சாத்தியம்.

தொ.பே: 079 745 37 95

manuela.hofbauer@pratteln.ch

மேலதிக விபரங்களை இந்த இணைய முகவரியில் காணலாம்.

**தாய் தந்தையர் ஆலோசனை: தொ.பே: 079 179 87 49**

**நிக்கோல் கீஸின் (Nicole Gisin) தொலைபேசி மூலமான உரையாடலுக்கு திங்கள் முதல் வெள்ளி வரை 08 மணி முதல் 10 மணி வரை.**

மழலைகள் மற்றும் சிறுவர்களுக்கான முன்னேற்றம், உணவு, பாலூட்டல், பராமரிப்பு மற்றும் குழந்தைவளர்ப்பு சம்பந்தமான ஆலோசனை.

தாய் தந்தையருக்கான ஆலோசனை வழங்குபவர் உளவியல் சிக்கல்களில் ஆலோசனை வழங்குவதுடன் பெற்றோரின் திறனை மேம்படுத்தவும் உதவியாக இருக்கிறார்.

போதுமான பதிவுகள் இருந்தால், குழந்தை மசாஜ் பற்றிய அறிமுக படிப்புகள் மாதத்திற்கு ஒரு முறை நடைபெறும்.

தொலைபேசி மூலம் முன் கூட்டியே பதிந்தவர்களுக்கு புதன் கிழமைகளில் மதியம் 1.30 மணி முதல் மாலை 5 மணி வரையிலும், வியாழக் கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும்  ஆலோசனைகள் நடைபெறும். தேவை ஏற்படின் வீட்டிற்கு வருகை சாத்தியமாகும்.

தொ.பே: 079 179 87 49

மின்னஞ்சல்: muetterberatung-n.gisin@bluewin.ch

**குடும்ப- மற்றும் குழந்தைவளர்ப்பு ஆலோசனை: தொ.பே: 079 637 14 68**

**டெபோரா ஆர் (Debora Ahr)**

குழந்தைவளர்ப்பு மற்றும் கல்வி, குடும்பம் அல்லது கூட்டாண்மை தொடர்பான கேள்விகளை எதிர்கொள்ளும் நபர்களுக்கு. பல்வேறு கேள்விகளுக்கு சிக்கலற்ற உதவி.

சீன மொழியில் நெருக்கடி என்ற சொல் ஆபத்து மற்றும் வாய்ப்பு என்ற அடையாளங்களால் எழுதப்படுகிறது. - தீர்வு சார்ந்தே வாய்ப்பு தேடப்படுகிறது.

நேர ஒதுக்கீடுகள் தொலைபேசிமூலம் முன்கூட்டியே நிர்ணயிக்க வேண்டும். வீட்டுக்கு வருகை இல்லை.

தொ.பே: 079 637 14 68

erziehungsberatung@pratteln.ch

**சகல விதமான ஆலோசனைகளும் பிறத்தலென் வாழும் மக்களுக்கு இலவசம். நேர ஒதுக்கீடுகள் தொலைபேசிமூலம் முன்கூட்டியே நிர்ணயிக்க வேண்டும். ஆலோசிக்கப்படும் விடயங்கள் இரகசியமாக பேணப்படும்.**

**Schlossstrasse 56 மேலும் காலணி (குடியிருப்பு) மேம்பாடு மற்றும் காலணிப்பணி அலுவலகத்தையும் நீங்கள் காணலாம்.**

கடந்த ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட பணிகளின் வழியாக குறிப்பிடப்பட்ட மூன்று காலணிகளின் முன்னேற்றங்கள் மட்டுமின்றி வெளியுலகின் மத்தியில் இக்காலணிகளின் மரியாதையும் அதிகரித்ததுள்ளது.

சுகத்தை உணருங்கள், உங்களின் சொந்த குடியிருப்பை வடிவமையுங்கள், புதிதாக எதுவாவது ஏற்பட உதவுங்கள். பிறாத்தலன் காலணிவளர்ச்சி நடுவம் தன்னை இதற்கு அர்ப்பணித்துள்ளது. இதற்காக சம்பந்தப்படடவர்களின் உள்வாங்கல் மிக முக்கியமான தேவையாகிறது. எல்லோரும் சேர்ந்து எது அவசியம் என தீர்மானிக்கப்படும்.

உங்களிடம் பரிந்துரை உள்ளதா? உங்கள் குடியிருப்பை வடிவமைக்க உதவ விரும்புகிறீர்களா?

உங்கள் அபிப்பிராயத்தை தெரிவியுங்கள்:

தொ.பே: 079 412 95 48

>benjamin.vanvulpen@pratteln.ch

>[www.pratteln/de/quartierarbeit](www.pratteln/de/quartierarbeit)

**நடமாடும் இளையோர் பணி: தொ.பே: 061 821 95 44**

நடமாடும் இளையோர்பணிக்குழு இளையோர் இருக்கும் இடத்தை நாடி செல்கிறது. அவர்கள் எங்கிருக்கிறார்களோ அங்கு தேடி செல்கிறது. பொது

இடங்கள், திறந்த வானத்தின் கீழே வசிப்பவர்கள் போன்றவர்களிடமும் செல்கிறது. இப்பணிக்குழுவின் தொடர்ச்சியான வருகையால் இவர்களுக்கிடையில் ஓர் சுகுமமான நல்லிணக்கத்தையும் ஓர் மரியாதையையும் ஏற்படுத்துகிறது.

சந்திக்கும் நேரம்: இலகுவாக அவர்களின் குழுமக்குறியீட்டை இனம்கண்டு அவர்களுடன் வீதியிலேயே நேரடியாக பேசுங்கள்.

மேலதிக தகவல்களுக்கு: www.pratteln.ch